*பொது நிருவாகச் சுற்றறிக்கை இல.:34/2019*

*எனது இலக்கம்: MPA/PSD/C5/SM/Amendment*
*பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும்*
*கால்நடை அபிவிருத்தி அமைச்சு*

*சுதந்திர சதுக்கம்,*
*கொழும்பி 07.*
*2019.11.21*

*அமைச்சுக்களின் செயலாளர்கள்,*
*மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,*
*திணைக்களத் தலைவர்கள்,*
*மாவட்ட செயலாளர்கள்,*
*பிரதேச செயலாளர்கள்,*

***இலங்கை திட்டமிடல் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு இணங்க, 2137/26 ஆம் இலக்க 2019.08.20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் ஊடாக சேர்க்கப்பட்ட திருத்தங்களை நடைமுறைப்படுத்துதல்***

*இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் மூன்றிலிருந்து (III) தரம் இரண்டுக்கும் (II) தரம் இரண்டிலிருந்து (II) தரம் ஒன்றுக்கும் (I) தரமுயர்வு வழங்குவதற்கான ஆகக் குறைந்த காலத்தை திருத்துவதுடன் தொடர்புடைய ஏற்பாடுகள் அடங்கிய 2137/26 ஆம் இலக்கத்தையும் 2019 ஆகஸ்ட் 20 ஆந் திகதியையும் கொண்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை திட்டமிடல் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கான நான்காவது சேவைப் பிரமாணக் குறிப்புத் திருத்தத்திற்கு இணங்க தற்போது சேவையிலுள்ள இலங்கை திட்டமிடல் சேவை உத்தியோகத்தர்களைத் தரமுயர்த்துதல் பின்வரும் விதத்தில் மேற்கொள்ளப்படும்.*

**01.** ***தரம் மூன்றிலிருந்து (III) தரம் இரண்டுக்கு (II) தரமுயர்த்துதல்***

***1.1)*** *2019 பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதிக்கு முன்னர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் திருத்தப்பட்டவாறான இலங்கை திட்டமிடல் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் 10.1.1.1 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யும் திகதி அல்லது 2019 பெப்ரவரி 26 ஆந் திகதி ஆகிய இரண்டில் பிந்திய திகதியிலிருந்து தரம் இரண்டிற்கு (II) தயமுயர்த்தப்படுவர்.*

***1.2)*** *இலங்கை திட்டமிடல் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் 09 ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ள அரசகரும மொழித் தேர்ச்சியை 01/2014 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை மற்றும் அதன் இடைநேர் விளைவான சுற்றறிக்கைகள் மூலம் வழங்கப்பட்டுள்ள சலுகைக் காலத்தினுள் பூர்த்தி செய்யும் உத்தியோகத்தர்கள் உரிய திகதியில் மற்றைய அரசகரும மொழித் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்துள்ளவர்களாகக் கருதப்படுவர்.*

*1.3)* திருத்தப்பட்டவாறான இலங்கை திட்டமிடல் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் 09 ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ள அரசகரும மொழித் தேர்ச்சியை 01/2014 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை மற்றும் அதன் இடைநேர் விளைவான சுற்றறிக்கைகள் மூலம் வழங்கப்பட்டுள்ள சலுகைக் காலத்தினுள் பூர்த்தி செய்யாத உத்தியோகத்தர்கள் மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சி அடங்கலாக இச்சுற்றறிக்கையின் 1.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்யும் தினத்திலிருந்து தரம் இரண்டுக்கு (II) தரமுயர்த்தப்படுவர்.

## 02. *தரம் இண்டிலிருந்து (II) தரம் ஒன்றுக்கு (I) தரமுயர்த்துதல்*

*2.1)* சேவைப் பிரமாணக் குறிப்பின் நான்காவது திருத்தம் நடைமுறைக்கு வரும் 2019 பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதியில் இரண்டாம் தரத்தில் இருக்கும் உத்தியோகத்தர்களுக்கும் மூன்றாம் (III) தரத்தில் ஆறு (06) வருடங்களுக்கு மேற்பட்ட செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களுக்கு

(அ) தரம் இரண்டிலிருந்து (II) தரம் ஒன்றுக்கு (I) தரமுயர்வு பெறுவதற்குப் பெற்றிருக்க வேண்டிய 10.2.1.1 இன் தொடர் இலக்கம் v இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முதுமானிப் பட்டத் தகைமையைப் பூர்த்தி செய்வதற்காக இச்சுற்றறிக்கை வெளியிடப்படும் திகதியிலிருந்து ஐந்து (05) வருட சலுகைக்காலம் வழங்கப்படுவதுடன் அந்தச் சலுகைக் காலத்தினுள் முதுமானிப் பட்டத் தகைமையைப் பூர்த்தி செய்யும் உத்தியோகத்தர்கள் இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க 10.2.1.1 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தகைமைகளைப் பூர்த்தி செய்த தினத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தரம் I இற்கு தரமுயர்த்தப்படுவர்.

(ஆ) தரம் II இலிருந்து தரம் I இற்கு தரமுயர்வு பெறுவதற்குப் பெற்றிருக்க வேண்டிய 10.2.1.1 இன் தொடர் இலக்கம் ii இன் கீழான இரண்டாம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையைப் பூர்த்தி செய்வதற்கு தரம் II இற்குத் தரமுயர்வு பெற்ற திகதியிலிருந்து மூன்று (03) வருட சலுகைக் காலமொன்று வழங்கப்படுவதுடன் அச்சலுகைக் காலப் பகுதியில் உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்யும் உத்தியோகத்தர்கள் இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க 10.2.1.1 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தகைமைகளைப் பூர்த்தி செய்த திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தரம் I இற்கு தரமுயர்த்தபடுவர்.

2.2) சேவைப் பிரமாணக் குறிப்பிற்கான நான்காவது திருத்தம் நடைமுறைக்கு வரும் 2019 பெப்ரவரி 26 ஆந் திகதியில் தரம் 11 இல் உள்ள உத்தியோகத்தர்களை தரம் 1 இற்கு தரமுயர்த்தும் போது 10.2.1.1 இன் (i) மற்றும் (iv) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்குப் பதிலாக பின்வரும் தகைமைகள் கவனத்திற் கொள்ளப்படும்.

(அ) தரம் II இல் இரண்டு (02) வருட செயலூக்கமிக்கதும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும் தரம் II இற்குத் தரமுயர்வு பெற்றதன் பின்னர் இரண்டு (02) சம்பள ஏற்றங்களை உழைத்திருத்தலும்.

(ஆ) அனுமதியளிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைக்கு இணங்க தரம் 11 இற்குத் தரமுயர்வு பெற்றதன் பின்னர் தரமுயர்வு வழங்கும் தினத்துக்கு முன்னரான இரண்டு (02) வருட காலத்தில் திருப்திகரமான அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்திலான செயலாற்றுகையை வெளிப்படுத்தியிருத்தல்.

**2.3)** சேவைப் பிரமாணக் குறிப்பின் நான்காவது திருத்தம் நடைமுறைக்கு வரும் 2019 பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதியில் தரம் III இல் ஆறு (06) வருடங்களுக்கு மேற்பட்ட செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள இச்சுற்றறிக்கையின் 1.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க தரம் II இற்கு தரமுயர்வு பெறும் உத்தியோகத்தர்களை தரம் I இற்குத் தரமுயர்த்தும் போது 10.2.1.1 இன் (i) மற்றும் (iv) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்குப் பதிலாக பின்வரும் தகைமைகள் கவனத்திற் கொள்ளப்படும்.

(அ) தரம் III மற்றும் II இல் பன்னிரண்டு (12) வருடங்கள் செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவை காலத்தையும் பூர்த்தி செய்திருத்தலும் பதினொரு (11) சம்பள ஏற்றங்களை உழைத்திருத்தலும்.

(ஆ) அனுமதியளிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைக்கு இணங்க தரமுயர்வு வழங்கும் தினத்துக்கு முன்னரான பன்னிரண்டு (12) வருட காலத்தில் திருப்திகரமான அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்திலான செயலாற்றுகையை வெளிப்படுத்தியிருத்தல்

**குறிப்பு:**

2019 பெப்ரவரி 26 ஆந் திகதிக்கு முன்னர் இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் III இல் ஆறு (06) வருடங்களுக்கு மேற்பட்ட செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள, இந்தச் சுற்றறிக்கையின் 1.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க தரம் II இற்கு தரமுயர்த்தப்பட்ட உத்தியோகத்தர்களை தரம் I இற்குத் தரமுயர்த்தும் போது அவ் உத்தியோகத்தர்கள் மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சியைப் பூர்த்தி செய்வதற்கு எடுத்த மேலதிக காலத்திற்குச் சமனான காலப்பகுதியினால் அந்த உத்தியோகத்தர்களை தரம் I இற்குத் தரமுயர்த்து தாமதிக்கப்படும்.

இச்சுற்றறிக்கை அரச சேவை ஆணைக்குழுவின் அனுமதியின் கீழ் வெளியிடப்படுகின்றது.

**ஜே. ஜே. ரத்னசிரி**
**செயலாளர்**
**பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ**
**மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சு**